# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2019
## 43 - கிறிஸ்தவம்
## பழைய பாடத்திட்டம்
## புள்ளி வழங்கும் விதம்

**பத்திரம் II**

இது இரண்டு பகுதிகளைக் கொண்டது. பகுதி ஒன்றின் மூன்றுவினாக்களில் ஏதேனும் இரண்டு வினாக்களுக்கும் பகுதி இரண்டில் உள்ள ஐந்து வினாக்களில் ஏதேனும் மூன்று வினாக்களுக்குமாக **மொத்தம் ஐந்து வினாக்களுக்கு** பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் **பத்திரம் II க்கு மொத்தம் 100 புள்ளிகள்** வழங்கப்படும்.

**பகுதி I**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (i) | - 04 புள்ளிகள் | (2) | (i) | - 04 புள்ளிகள் | (3) | (i) | - 04 புள்ளிகள் |
| | (ii) | - 04 புள்ளிகள் | | (ii) | - 04 புள்ளிகள் | | (ii) | - 04 புள்ளிகள் |
| | (iii) | - 04 புள்ளிகள் | | (iii) | - 04 புள்ளிகள் | | (iii) | - 04 புள்ளிகள் |
| | (iv) | - 04 புள்ளிகள் | | (iv) | - 04 புள்ளிகள் | | (iv) | - 04 புள்ளிகள் |
| | (v) | - 04 புள்ளிகள் | | (v) | - 04 புள்ளிகள் | | (v) | - 04 புள்ளிகள் |
| | **மொத்தம் 20 புள்ளிகள்** | | | **மொத்தம் 20 புள்ளிகள்** | | | **மொத்தம் 20 புள்ளிகள்** | |

**பகுதி - II**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| (4) | (i) | - 10 புள்ளிகள் | (5) | (i) | - 10 புள்ளிகள் | (6) | (i) | - 10 புள்ளிகள் |
| | (ii) | - 10 புள்ளிகள் | | (ii) | - 10 புள்ளிகள் | | (ii) | - 10 புள்ளிகள் |
| | **மொத்தம் 20 புள்ளிகள்** | | | **மொத்தம் 20 புள்ளிகள்** | | | **மொத்தம் 20 புள்ளிகள்** | |
| (7) | (i) | - 10 புள்ளிகள் | (8) | (i) | - 10 புள்ளிகள் | | | |
| | (ii) | - 10 புள்ளிகள் | | (ii) | - 10 புள்ளிகள் | | | |
| | **மொத்தம் 20 புள்ளிகள்** | | | **மொத்தம் 20 புள்ளிகள்** | | | | |

**இறுதிப் புள்ளி கணக்கிடல்**

பத்திரம் I க்கு 100 புள்ளிகள்

பத்திரம் II க்கு 100 புள்ளிகள்

**∴ இறுதிப் புள்ளிகள் 200/2 = 100 புள்ளிகள்**

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..............................................................................  ✓  4/5
..............................................................................
..............................................................................

(ii) ..............................................................................  ✓  3/5
..............................................................................
..............................................................................

(iii) ..............................................................................  ✓  3/5
..............................................................................
..............................................................................

(03)  (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்/ Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

05.08.2019 / 0830 – 1030

ක්‍රිස්තියානි ධර්මය I
கிறிஸ்தவம் I
Christianity I

43 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** திருவிவிலியத்தில் பல நுல்கள் உள்ளடங்கியிருப்பினும் அது ஒரு நூலாக இருப்பது,
(1) ஒன்றாக இணைக்கப்பட்டிருப்பதனாலாகும்.
(2) அதன் கருப்பொருள் ஒன்றாக இருப்பதனாலாகும்.
(3) ஒன்றாக தொகுக்கப்பட்டிருப்பதனாலாகும்.
(4) பிப்றஸ் என்ற தாளில் எழுதப்பட்டிருப்பதனாலாகும்.
(5) துணை ஆசிரியர் மனிதன் என்பதனாலாகும்.

**2.** திருவிவிலியம் எழுதப்பட்டதன் நோக்கம் குறிப்பிடப்பட்டுள்ள திருமுகம் எது?
(1) 1 திமோத்தேயு (2) எபிரேயர் (3) 1 கொரிந்தியர்
(4) 2 கொரிந்தியர் (5) 2 திமோத்தேயு

**3.** பஞ்சாகமம்,
(1) சட்ட நூல்கள் தொகுதியைச் சேர்ந்தவையாகும்.
(2) இறைவாக்கினர் நூல்கள் தொகுதியைச் சேர்ந்தவையாகும்.
(3) திருமுகங்கள் தொகுதியைச் சேர்ந்தவையாகும்.
(4) லேவியர் ஆகமத் தொகுதியைச் சேர்ந்தவையாகும்.
(5) இணைச்சட்ட நூல் தொகுதியைச் சேர்ந்தவையாகும்.

**4.** எந்த அரசனுடைய காலத்தில் திருவிவிலியம் எழுத ஆரம்பிக்கப்பட்டது?
(1) சவுல் (2) தாவீது (3) சாலமோன்
(4) ரெகேபோவாம் (5) ஜெரோபோவாம்

**5.** இஸ்ராயேல் மக்களை மிதியான் நாட்டவரிடமிருந்து விடுவிக்க இறைவன் யார் மூலமாகச் செயற்பட்டார்?
(1) சாமுவேல் (2) தெபோரா (3) எஸ்தர் (4) கிடியோன் (5) சம்சன்

**6.** இறைவன் யார் மூலமாகக் கானான் நாட்டைப் பிரித்துக்கொடுத்தார்?
(1) மோசே (2) யோசுவா (3) யூதா (4) யோசேப் (5) ஆபிரகாம்

7. தாவீதின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஒரு விசேட நிகழ்வானது,
(1) பெத்தேலிலிருந்த வழிபாட்டுத் தலத்தைப் புனரமைத்தமையாகும்.
(2) தானில் வழிபாட்டுத் தலத்தை ஆரம்பித்தமையாகும்.
(3) தந்தையிடமிருந்து மகனுக்கு ஆட்சியதிகாரம் கையளிக்கப்படும் அரச பரம்பரை முறையை ஆரம்பித்தமையாகும்.
(4) வட, தென் அரசாகப் பிரித்து ஆட்சி செய்தமையாகும்.
(5) யூத மக்கள் பபிலோனியாவுக்கு நாடுகடத்தப்பட்டமையாகும்.

8. வட அரசில் ஆரம்பிக்கப்பட்ட இரு மரபுகளுமாவன,
(1) E யும் D யும் ஆகும். (2) E யும் P யும் ஆகும். (3) J யும் D யும் ஆகும்.
(4) J யும் E யும் ஆகும். (5) Jயும் P யும் ஆகும்.

9. இறைவன் மோசேக்கு மட்டுமே இறை வல்லமையின் மகிமையைக் காண்பித்தமையைக் கருப்பொருளாகக் கொண்ட மரபு
(1) D மரபு ஆகும். (2) E மரபு ஆகும். (3) J மரபு ஆகும்.
(4) P மரபு ஆகும். (5) வாய்மொழிமரபு ஆகும்.

10. மனிதன் மண்ணிலிருந்து படைக்கப்பட்டான் என்பதிலிருந்து அடையாளப்படுத்தப்படுவது
(1) இறை அன்பு ஆகும். (2) இறை பராமரிப்பு ஆகும்.
(3) மறை பொருள் தன்மையாகும். (4) மரணத்திற்குள்ளாகும் தன்மையாகும்.
(5) கீழான தன்மையாகும்.

11. பாவத்தைப் பற்றிய பிரதான படிப்பினைகளைக் காணக்கூடியதாக இருப்பது
(1) விடுதலைப் பயண நூலிலாகும். (2) லேவியர் ஆகமத்திலாகும்.
(3) எண்ணிக்கை நூலிலாகும். (4) தொடக்க நூலிலாகும்.
(5) இணைச்சட்ட நூலிலாகும்.

12. யாருடைய எல்லா சுக செல்வங்கள் மத்தியில் மோசே வளர்ந்தார்?
(1) பார்வோனின் (2) தாவீதின் (3) ஆரோனின்
(4) ஆபிரகாமின் (5) யோசேப்பின்

13. இறைவனின் மூலம் மோசே பார்வோனின் அரண்மனைக்கு அனுப்பப்பட்டு அங்கு மோசே எச்சரிக்கை விடுத்து எதிர்காலத்தில் இடம்பெறப் போவதைக் கூறி ஏற்படுத்திய பெரும் துன்பம்
(1) கொசுக்களின் தொல்லை (2) தவளைகளின் தொல்லை (3) கல்மழை பெய்தல்
(4) கொப்புளங்கள் வெடித்தல் (5) ஈக்களின் தொல்லை

14. எகிப்தியர் முகங்கொடுத்த பெரும் துன்பங்களில் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - கொசுக்களின் தொல்லை
B - வெட்டுக்கிளிகளின் தொல்லை
C - காரிருள்
D - கால்நடைகளின் சாவு
E - கொப்புளங்கள் வெடித்தல்
F - தலைமகன் சாவு
இவற்றில் பார்வோன் மன்னனுடன் எதுவித தொடர்புமின்றி மோசேயும் ஆரோனும் சேர்ந்து உருவாக்கிய பெருந்துன்பங்களைக் குறிக்கும் விடையைத் தெரிவுசெய்க.
(1) A, B, D (2) A, C, F (3) A, D, E (4) A, E, F (5) C, D, E

15. பாஸ்கா என்பது
(1) மேய்ப்பாளர்களின் விழாவாகும். (2) விவசாயிகளின் விழாவாகும்.
(3) மீனவர்களின் விழாவாகும். (4) பலதரப்பட்ட தொழிலாளர்களின் விழாவாகும்.
(5) எகிப்தியரின் விழாவாகும்.

**16.** இறைவன் தமக்கு எதிராகச் செயற்பட்ட மக்களை அழிவுக்குள்ளாக்கினாலும் மனித இனத்தின் இருப்பை அழிவுக்குள்ளாக்கவில்லை என்பதை எடுத்துக்காட்டும் ஒரு கதையாக அமைவது
(1) பாபேல் கோபுரத்தின் கதையாகும்.
(2) ஆதாம், ஏவாள் தொடர்பான கதையாகும்.
(3) ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்த கதையாகும்.
(4) வெள்ளப்பெருக்கு தொடர்பான கதையாகும்.
(5) சொதோம் கொமோரா தொடர்பான கதையாகும்.

**17.** கோத்திரமாக வாழ்ந்த இஸ்ராயேல் மக்கள் ஒழுக்கமுள்ள இனமாகியது,
(1) எட்டுப் பேறுகளுக்கும் பிரமாணிக்கமாய் இருந்தமையினாலாகும்.
(2) சீனாய் உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் இருந்தமையினாலாகும்.
(3) பாகால் தெய்வங்களை வழிபட்டமையினாலாகும்.
(4) அரசியல் தாக்கங்களினாலாகும்.
(5) சமுதாயத்தின் தாக்கங்களினாலாகும்.

**18.** பின்வருவன இறைவாக்கினர் சிலரின் பெயர்களாகும்.
A - எசாயா B - ஒசேயா C - யோவேல் D - எசெக்கியேல் E - எரேமியா
இங்கு தரப்பட்டவற்றுள் பெரிய இறைவாக்கினர்களைக் குறிக்கும் எழுத்துக்கள் யாவை?
(1) A, B, C (2) A, B, D (3) A, D, E (4) B, C, D (5) C, D, E

**19.** எசெக்கியேல் இறைவாக்கினர் தமது இறைவாக்குப் பணியில் ஈடுபட்ட பிரதேசம்
(1) பலஸ்தீனா (2) அசீரியா (3) எகிப்து (4) பபிலோனியா (5) சமாரியா

**20.** "மகளே சீயோன்... உன் அரசர் உன்னிடம் வருகிறார்" எனத் திருவிவிலியத்தில் குறிப்பிடுபவர்
(1) யோவேல் இறைவாக்கினராவார். (2) எசாயா இறைவாக்கினராவார்.
(3) எசெக்கியேல் இறைவாக்கினராவார். (4) மீக்கா இறைவாக்கினராவார்.
(5) செக்கரியா இறைவாக்கினராவார்.

**21.** வெளிப்படையாகக் காணப்படாவிட்டாலும் சமுதாயத்திற்குள் மறைக்கப்பட்ட அநீதியைப் பற்றிப் பேசிய இறைவாக்கினர்
(1) எசாயா ஆவார். (2) எரேமியா ஆவார். (3) ஆமோஸ் ஆவார்.
(4) எசெக்கியேல் ஆவார். (5) மீக்கா ஆவார்.

**22.** உரோமைப் பேரரசின் அதிகாரத்தில் அதிக லாபம் பெறுவதற்காக உரோமையரைச் சார்ந்தவர்களாக யூத சமூகத்தில் செயலாற்றிய குழுவினர்
(1) ஏரோதியராவர். (2) பரிசேயராவர். (3) எஸ்சேனியராவர்.
(4) சதுசேயராவர். (5) லேவியராவர்.

**23.** சமூக அடிப்படையில் மிகவும் கீழ் நிலையினர் எனக் கணிக்கப்பட்டவர்கள்,
(1) பரிசேயர் (2) சதுசேயர் (3) ஏரோதியர் (4) சமாரியர் (5) எஸ்சேனியர்

**24.** கிறிஸ்துவின் பிள்ளைப் பருவத்தைப் பற்றிக் குறிப்பிடும் நற்செய்திகள் இரண்டும் யாவை?
(1) மாற்கு, மத்தேயு (2) லூக்கா, மத்தேயு (3) யோவான், மாற்கு
(4) மத்தேயு, யோவான் (5) மாற்கு, லூக்கா

**25.** திருக்கோவிலின் திரை இரண்டாகக் கிழிதலின் மூலம் அடையாளப்படுத்தப்படுவது
(1) கிறிஸ்துவின் வேதனைகள் வெளிப்படுத்தப்பட்டன என்பதாகும்.
(2) இறைவனிடம் செல்லும் வழியைக் கிறிஸ்துநாதர் திறந்து வைத்தார் என்பதாகும்.
(3) இறைவனின் பிரசன்னம் சந்தேகத்திற்குரியது என்பதாகும்.
(4) உயிர்ப்பு நிகழும் என முன்னறிவிக்கப்பட்டது என்பதாகும்.
(5) சூழலின் மாற்றத்தின் மூலம் உயிர்ப்பின் செய்தி வெளிப்படுத்தப்படுகின்றது என்பதாகும்.

**26.** ஸ்தேபானுக்குப் பின்னர் கிரேக்க யூதர்களின் தலைவராகச் செயற்பட்டவர்
(1) யாக்கோபு ஆவார். (2) பவுல் ஆவார். (3) அனனியா ஆவார்.
(4) பிலிப்பு ஆவார். (5) பர்னபா ஆவார்.

**27.** கிரேக்க கலாசார நிலையமாக இனங்காணத்தக்கதும் பல அறிஞர்களையும் தத்துவ வல்லுனர்களையும் உருவாக்கியதுமான நகரமாக இருப்பது
(1) தர்சு (2) எபேசு (3) அந்தியோக்கியா
(4) லிஸ்திரா (5) கொரிந்து

**28.** மரியாவின் பக்திக்கு வலுச்சேர்த்த பொதுச்சங்கம் எது?
(1) எபேசு பொதுச்சங்கமாகும். (2) நிசேயா பொதுச்சங்கமாகும்.
(3) கல்சிடோன் பொதுச்சங்கமாகும். (4) கொன்ஸ்தாந்திநோபிள் பொதுச்சங்கமாகும்.
(5) திரிதெந்தீன் பொதுச்சங்கமாகும்.

**29.** தரக்கவியலாளர்கள் மத்தியில் மிகவும் திறமை வாய்ந்த தர்க்கவியலாளராக விளங்கியவர்,
(1) தூய பெரிய கிரகோரி ஆவார். (2) தூய அம்புறோஸ் ஆவார்.
(3) தூய அகுஸ்தீன் ஆவார். (4) தூய பெரிய பசில் ஆவார்.
(5) தூய ஜஸ்டின் ஆவார்.

**30.** கிறிஸ்துவிற்குள் இணைந்திருந்த மனித சுபாவத்தை மறுதலித்துப் பேசிய பேதகமாவது
(1) பெலாஜிய பேதகம் (2) ஆரிய பேதகம் (3) இயுத்திக்கேய பேதகம்
(4) நெஸ்டோரிய பேதகம் (5) கீழ்நிலைக் கொள்கை

**31.** திருத்தந்தை VIII ஆவது பொனிபஸ்ஸினால் திருச்சபைத் தந்தையர்களென பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் யாவர்?
(1) தூய ஜெரோம், தூய அகுஸ்தீன், தூய அம்புறோஸ், தூய கிரகோரி
(2) தூய கிரகோரி, தூய பெரிய பசில், தூய ஜெரோம், தூய அத்தனாசியார்
(3) தூய ஜோன் கிறிசோஸ்தம், தூய கிரகோரி, தூய ஜெரோம், தூய அகுஸ்தீன்
(4) தூய பொலிக்கப், தூய இக்னேசியஸ், தூய கிரகோரி, தூய ஜெரோம்
(5) தூய அம்புறோஸ், தூய கிரகோரி, தூய பொலிக்கப், தூய ஜெரோம்

**32.** இயேசு இறைவனின் இன்னுமொரு படைப்பு என வெளிப்படுத்திய பேதகம் குறிப்பிடப்படுவது,
(1) இயுத்திக்கேய பேதகம் என்றாகும். (2) நெஸ்டோரிய பேதகம் என்றாகும்.
(3) ஆரிய பேதகம் என்றாகும். (4) மோனத்தேலா பேதகம் என்றாகும்.
(5) பெலாஜிய பேதகம் என்றாகும்.

**33.** கி.பி. 431 இல் எபேசு பொதுச்சங்கம் எக்காரணத்துக்காகக் கூட்டப்பட்டது?
(1) கீழ்நிலைக் கொள்கைக்குப் பதிலளிப்பதற்காக ஆகும்.
(2) நெஸ்டோரிய பேதகத்திற்குப் பதிலளிப்பதற்காக ஆகும்.
(3) இயுத்திக்கேய பேதகத்திற்குப் பதிலளிப்பதற்காக ஆகும்.
(4) ஆரிய பேதகத்திற்குப் பதிலளிப்பதற்காக ஆகும்.
(5) மோனத்தேலா பேதகத்திற்குப் பதிலளிப்பதற்காக ஆகும்.

**34.** அலெக்சாந்திரியாவின் குருகுலத்தின் தலைவரென வரலாற்றில் பெயரிடப்பட்டுள்ள திருச்சபைத் தந்தை,
(1) தூய சிறில் ஆவார். (2) தூய ஜெரோம் ஆவார். (3) தூய ஓரிஜன் ஆவார்.
(4) தூய ஜஸ்டின் ஆவார். (5) தூய தேர்த்துல்லியன் ஆவார்.

**35.** திருப்பலியில் செபிக்கப்படும் விசுவாசப் பிரமாணத்தை திருச்சபையின் வேத சத்தியமாக ஏற்றுக்கொண்டு அதனைச் செபிப்பதற்கு அங்கிகாரம் வழங்கிய பொதுச்சங்கம் எது?
(1) எருசலேம் பொதுச்சங்கம் (2) நிசேயா பொதுச்சங்கம்
(3) கல்சிடோன் பொதுச்சங்கம் (4) எபேசு பொதுச்சங்கம்
(5) கொன்ஸ்தாந்திநோபிள் பொதுச்சங்கம்

**36.** அட்டில்லா என்னும் 'ஹன்ஸ்' கோத்திரத் தலைவனின் தாக்குதல்களிலிருந்து உரோமையைப் பாதுகாத்துக்கொள்ள முன்னோடியாகச் செயற்பட்டவர்
(1) திருத்தந்தை பெரிய கிரகோரியாவார். (2) திருத்தந்தை XII ஆவது அருளப்பராவார்.
(3) திருத்தந்தை I ஆவது லியோவாவார். (4) தூய பொனிபஸ் ஆவார்.
(5) திருத்தந்தை II ஆவது சில்வெஸ்டராவார்.

**37.** 'கிறிஸ்தவ மறையின் நிறுவனங்கள்' என்னும் நூலை வெளியிட்டவர்,
(1) மாட்டின் லூத்தர் ஆவார். (2) ஜோன் வெஸ்லி ஆவார். (3) வில்லியம் பூத் ஆவார்.
(4) ஹுல்ரிச் சுவிங்லி ஆவார். (5) ஜோன் கல்வின் ஆவார்.

**38.** கி.பி. 1054 இல் கீழைத்தேய திருச்சபை கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து பிரிந்து சென்று கிரேக்க ஒத்தடொக்ஸ் சபை உருவாகக் காரணமாயமைந்தது,
(1) அருளடையாளங்கள் மறுக்கப்பட்டமை ஆகும்.
(2) திருவிவிலியம் மறுக்கப்பட்டமை ஆகும்.
(3) திருப்பலி மறுக்கப்பட்டமை ஆகும்.
(4) ஒரே திருச்சபை என்னும் இறை திருவுளம் புறக்கணிக்கப்பட்டமை ஆகும்.
(5) பரிபூரண பலன்கள் புறக்கணிக்கப்பட்டமை ஆகும்.

**39.** "இறையியல் என்பது விளக்கத்தினை தேடிச்செல்லும் விசுவாசமாகும்" எனக் குறிப்பிட்டவர்
(1) ஜோன் கல்வின் (2) பீற்றர் லெம்பட் (3) தூய அகுஸ்தினார்
(4) மாட்டின் லூத்தர் (5) காண்டற்புரி புனித அன்சலம்

**40.** கார்மேல் சபையின் துறவற வாழ்வை இங்கிலாந்திற்கு அறிமுகம் செய்தவர்
(1) தூய சைமன் ஸ்டொக் (2) தூய அவிலா திரேசாள் (3) தூய சிலுவை அருளப்பர்
(4) அசீசி தூய பிரான்சிஸ் (5) தூய பீற்றர் கனிசியஸ்

**41.** பெண்கள் அபோஸ்தலிக்க பணியில் ஈடுபடுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட முதல் சபை,
(1) திருக்குடும்ப சபையாகும். (2) கார்மேல் சபையாகும்.
(3) தூய தூதர்கள் சபையாகும். (4) அன்பின் சகோதரிகளின் சபையாகும்.
(5) நல்லாயன் சபையாகும்.

**42.** இலங்கையின் கிறிஸ்தவ திருச்சபை வரலாற்றைக் கற்பதற்குப் பிரதான மூலமாக விளங்கும் 'த கிறிஸ்டியன் டொப்போகிறப்பி' என்னும் நூலை எழுதியவர்
(1) றொபட் நொக்ஸ் ஆவார்.
(2) கொஸ்மஸ் இன்டிகொப்லெயுஸ்டஸ் ஆவார்.
(3) செனரத் பரணவித்தாண ஆவார்.
(4) அருட்பணி கொன்சால்வேஸ் அடிகளார் ஆவார்.
(5) தொன் ஜெரனிமோ ஆவார்.

**43.** சிகிரியா காலத்தில் இந்தியாவிலிருந்து வருகை தந்த மிகார் என்னும் சேனாதிபதி ஒரு கிறிஸ்தவனாக இருந்ததோடு, அவனால் கட்டப்பட்ட தேவாலயத்தில் 'அபிஷேக-மக்களுக்காக' எனக் குறிப்பிடப்பட்டிருப்பது இயேசு கிறிஸ்துவையாகும் என்னும் கருத்தை வெளிப்படுத்தியவர் யார்?
(1) அபுசைதோ ஆவார். (2) செனரத் பரணவித்தாண ஆவார்.
(3) ஏ.ஆர். அயர்டன் ஆவார். (4) பென்ஜமின் ரபாயின் ஆவார்.
(5) லெனாட் வுல்ப் ஆவார்.

**44.** 1557 இல் தர்மபால மன்னன் எப்பெயரால் கத்தோலிக்க மதத்தை ஏற்றுக்கொண்டான்?
(1) மாயாதுன்ன (2) டொன் யுவான் தர்மபால (3) யுவன் த விலா
(4) றைகம் பண்டார (5) அந்தோனியோ

**45.** போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்க மறைத்தூதுவர்களின் மறைப்போதகப் பணிகளை இலகுவாக நிறைவேற்ற முடிந்ததற்கான காரணம் அவர்களிடத்தில் காணப்பட்ட எப்பண்பாகும்?
(1) நுண்ணறிவுடன்கூடிய மொழியறிவு (2) எளிமையான வாழ்க்கை முறை
(3) மானிய முறை (4) சமுதாய வாழ்க்கை முறை
(5) நிதிரீதியான வசதிகளை வழங்குதல்

**46.** எந்த ஆட்சிக்காலத்தில் திருவிவிலியம் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, மக்கள் மத்தியில் பரவச்செய்யப்பட்டது?
(1) போர்த்துக்கேயர் ஆட்சி (2) ஒல்லாந்தர் ஆட்சி (3) ஆங்கிலேயர் ஆட்சி
(4) சிங்களவர் ஆட்சி (5) தமிழர் ஆட்சி

**47.** திருவிவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர்
(1) அருட்பணி ஞானப்பிரகாசம் அடிகளார் (2) பேதுரு புளிவர்
(3) யுவான் கண்டல் அடிகளார் (4) பர்சிவள் ஐயர்
(5) ஹென்றி கென்ரிக்கஸ்

**48.** பின்வருவன இலங்கை கிறிஸ்தவ வரலாற்றின் பிரதான நூல்கள் சிலவாகும்.
A - வேதகாவியம்
B - மங்களகீதம்
C - கொன்ஸ்தாந்தின் போராட்டம்
D - பெரியகுறிப்பிடம்
E - நல்லூர் சுவாமி
இவற்றுள் அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரால் எழுதப்பட்ட நூல்களை மாத்திரம் கொண்ட தெரிவு யாது?
(1) A, B (2) A, E (3) B, C (4) B, D (5) C, D

**49.** இலங்கையில் தியோகிசி அல்லது இரு மறை மாவட்டங்களின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டு பணியில் ஈடுபட்டுள்ள கிறிஸ்தவ சபை
(1) இலங்கைச் சபையாகும். (2) மெதடிஸ்த சபையாகும்.
(3) பப்டிஸ்ட் சபையாகும். (4) புரட்டாஸ்தாந்து சபையாகும்.
(5) தென்னிந்திய சபையாகும்.

**50.** கடந்த காலத்தில் இடம்பெற்ற அனைத்து பிரிவினைகளையும் மறந்து ஒரே கிறிஸ்துவின் ஒரே சபைக்காக அர்ப்பணிப்போடு செயற்படல் அல்லது அதற்காக எடுக்கும் முயற்சி
(1) கிறிஸ்தவ சபைகளுக்கிடையிலான உரையாடலாகும்.
(2) கிறிஸ்தவ சபைகளுக்கிடையிலான ஒற்றுமையாகும்.
(3) கிறிஸ்தவ சபை ஒன்றுகூடலாகும்.
(4) கிறிஸ்தவ சபை பங்கேற்றலாகும்.
(5) கிறிஸ்தவ சபை ஒழுங்கமைப்பாகும்.

***

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

## පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்

| විෂය අංකය<br>பாட இலக்கம் | 43 | විෂයය<br>பாடம் | கிறிஸ்தவம் |
|---|---|---|---|

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 4 | 21. | 3 | 31. | 1 | 41. | 4 |
| 02. | 5 | 12. | 1 | 22. | 1 | 32. | 3 | 42. | 2 |
| 03. | 1 | 13. | 2 | 23. | 4 | 33. | 2 | 43. | 2 |
| 04. | 3 | 14. | 2 | 24. | 2 | 34. | 3 | 44. | 2 |
| 05. | 4 | 15. | 1 | 25. | 2 | 35. | 5 | 45. | 2 |
| 06. | 2 | 16. | 4 | 26. | 4 | 36. | 3 | 46. | 2 |
| 07. | 3 | 17. | 2 | 27. | 1 | 37. | 5 | 47. | 4 |
| 08. | 1 | 18. | 3 | 28. | 1 | 38. | 4 | 48. | 1 |
| 09. | 4 | 19. | 4 | 29. | 5 | 39. | 5 | 49. | 1 |
| 10. | 3 | 20. | 5 | 30. | 3 | 40. | 1 | 50. | 1 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 50 = 100

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்/ Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

ක්‍රිස්තියානි ධර්මය II
கிறிஸ்தவம் II
Christianity II

43 T II

06.08.2019 / 0830 – 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ **பகுதி I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) திருவிவிலியத்தினை எழுதும்போது துணை ஆசிரியர் செயற்பட்ட முறையை **நான்கு** காரணிகளின் மூலம் எடுத்துக்காட்டுக.

(ii) புராதன கீழைத்தேய உலகில் 'பாம்பின்' மூலம் அடையாளப்படுத்தப்பட்ட விடயங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(iii) சமாரியாவிற்குச் சொந்தமான பிரதேசங்கள் **நான்கைத்** தருக.

(iv) தூய பவுல் குறிப்பிடுவதன்படி இறக்கும்போதுள்ள உடலின் இயல்புக்கும் உயிர்த்தெழுதலின்போது உள்ள உடலின் இயல்புக்குமிடையில் காணப்படும் வேறுபாட்டை **நான்கு** காரணிகள் மூலம் எடுத்துக்காட்டுக.

(v) ஸ்தேவானுக்குப் பின்னர் யூத கிறிஸ்தவர்களின் தலைவராகச் செயற்பட்ட பிலிப்பு சமுதாயத்தில் ஆற்றிய பணிகள் **நான்கினை** எழுதுக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

**2.** (i) செங்கடலைக் கடத்தல் பற்றி முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் **நான்கினை** எழுதுக.

(ii) உண்மையில் துன்புறும் ஊழியன் யார் என்பதனை **நான்கு** விடயங்களின் மூலம் விளக்குக.

(iii) திருத்தந்தை VII ஆவது பத்திநாதரின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட புதிய துறவற சபைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(iv) போர்த்துக்கேயரின் மறைபோதகப் பணி இலங்கையில் வெற்றியளிப்பதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் **நான்கு** தருக.

(v) இறுதி இரா உணவுடன் தொடர்புடையதாகக் காணப்படும் அறிக்கைகள் **நான்கின்** பெயர்களைக் குறிப்பிடுக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

**3.** (i) இறைவாக்கினரின் படிப்பினையின்படி சமுதாயத்தில் அநீதியை விளைவிக்கும் பல்வேறு துறைகள் **நான்கைக்** குறிப்பிடுக.

(ii) கர்த்தர் கற்பித்த செபம், இயேசுவின் வேண்டல் ஆகிய இரண்டுக்குமிடையே காணப்படும் ஒத்த பண்புகள் **நான்கினை** எழுதுக.

(iii) தூய யோவான் எடுத்துக்காட்டுவதன்படி உயிர்ப்பின் பின்னர் கிறிஸ்து காட்சிகொடுத்த சந்தர்ப்பங்கள் **நான்கினை** எழுதுக.

(iv) கிறிஸ்தவ திருவழிபாடுகளுக்கு கிரேக்க மூலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற செல்வாக்குகள் **நான்கினை** எழுதுக.

(v) உரோம கத்தோலிக்க திருவழிபாட்டுச் சடங்குகளின் விசேட **பண்புகள்** நான்கு தருக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

## பகுதி II

**4.** (i) பாலைநிலப் பயணத்தில் இஸ்ராயேல் மக்கள் இறை பராமரிப்பை அனுபவித்த சந்தர்ப்பங்கள் **ஐந்தினைச்** சுருக்கமாக விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) கிறிஸ்தவராகிய நீர் உமது அன்றாட வழ்க்கையில் இறை பராமரிப்பை அனுபவிக்கும் சந்தர்ப்பங்கள் **ஐந்தினைச்** சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

**5.** (i) தூய மாற்கு நற்செய்தியின் ஆசிரியத்துவம், நோக்கம், பிரதான பண்புகள் ஆகியன பற்றிச் சுருக்கமாக விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) இறை அரசின் பெறுமதிகளை எடுத்துக்காட்டும் உவமைகள் **ஐந்தினைக்** குறிப்பிட்டு, அவற்றின் மூலம் கிடைக்கும் செய்திகள் **ஐந்தினை** உமது வாழ்க்கையுடன் தொடர்புபடுத்திச் சுருக்கமாக விவரிக்குக. (10 புள்ளிகள்)

**6.** (i) கிறிஸ்துவின் காலத்திற்கு முன்னர் பலஸ்தீனாவை ஆட்சிசெய்த பேரரசர்கள் **மூவரின்** பெயர்களைக் குறிப்பிட்டு, அக்காலப்பகுதியில் இடம்பெற்ற விசேட நிகழ்வுகள் **இரண்டினை** விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) தூய பவுலின் முக்கிய படிப்பினைகள் **ஐந்தினைக்** குறிப்பிட்டு, இன்றைய சமூகத்திற்கு அவை எவ்வாறு பொருத்தமானதாக அமைகின்றன என்பதனைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

**7.** (i) பதினாறாம் நூற்றாண்டில் திருச்சபையின் மறுசீரமைப்புப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் தலைமைத்துவம் வழங்கிய குருத்துவ, துறவற சபைகள் **ஐந்தின்** பெயர்களைக் குறிப்பிட்டு, அவை பற்றிச் சுருக்கமாக விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) சீர்திருத்தச் சபைகளின் போதனைகளுக்குப் பதிலளிப்பதற்காகக் கூடப்பட்ட திரிதெந்தீன் பொதுச்சங்கத்தின் (1545 - 1563) மூலம் முன்வைக்கப்பட்ட மறுமலர்ச்சிச் செயற்றிட்டங்கள் **ஐந்தினைக்** குறிப்பிட்டு, அவை உமது ஆன்மீக மேம்பாட்டுக்கு உதவும் விதத்தினைச் சுருக்கமாக விவரிக்குக. (10 புள்ளிகள்)

**8.** (i) தூய யோசேப்வாஸ் அடிகளாரின் மறைத்தூதுக் கொள்கைகள் **ஐந்தினைச்** சுருக்கமாக விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) அண்மைக்காலத்தில் இலங்கையில் பல்வேறு இனங்களினதும் மதங்களினதும் சமுதாயக் குழுக்களினதும் உரிமைகளுக்காக கிறிஸ்தவ குரல் எழுப்புதல் தொடர்பாக **ஐந்து** காரணிகளை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

* * *

# கிறிஸ்தவம் II
# பகுதி I

01. (i) **திருவிவிலியத்தினை எழுதும் போது துணை ஆசிரியர் செயற்பட்ட முறையை நான்கு காரணிகளின் மூலம் எடுத்துக்காட்டுக.**

- இறை வல்லமையினால் செயற்படுவர்.
- பரம்பரையாய் வரும் வல்லமையைப் பயன்படுத்துவர்.
- துணைக்காரணியாய் செயற்படுவர்.
- இறை ஏவுதலால் செயற்படுதல்.
- இறை வார்த்தையை தமக்குப் பாரம்பரியமாக வந்ததாக முன்வைப்பர்.

(1 × 4 = 4 புள்ளிகள்)

(ii) **புராதன கீழைத்தேய உலகில் பாம்பின் மூலம் அடையாளப்படுத்தப்பட்ட விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.**

- சிக்கலும் ஒழுங்கீனமும் நிறைந்தது.
- அறிவு நிறைந்தது.
- தந்திரமும் மிக சூழ்ச்சியும் மிக்கது.
- சிக்கலான உள ஆசைகளுக்கு அடையாளப்படுத்தப்படுகின்றது.

(1 × 4 = 4 புள்ளிகள்)

(iii) **சமாரியாவிற்குச் சொந்தமான பிரதேசங்கள் நான்கைத் தருக.**

- செக்கேம்
- கெரிசிம் மலை
- பெத்தேல்
- சீலோ
- தோத்தான்

(1 × 4 = 4 புள்ளிகள்)

(iv) **தூய பவுல் குறிப்பிடுவதன்படி இறக்கும் போதுள்ள உடலின் இயல்புக்கும் உயிர்த்தெழும் போது உள்ள உடலின் இயல்புக்குமிடையில் காணப்படும் வேறுபாட்டை நான்கு காரணிகள் மூலம் எடுத்துக்காட்டுக.**

| இறக்கும் போது | உயிர்த்தெழும் போது |
|---|---|
| – அழிவுக்குரிய உடல் | – அழியாத உடல் |
| – மதிப்பற்ற உடல் | – மாண்புக்குரிய உடல் |
| – வலுவற்ற உடல் | – வல்லமையுள்ள உடல் |
| – மனித இயல்பு கொண்ட உடல் | – ஆவிக்குரிய உடல் |
| – களி மண்ணாலான உடல் | – விண்ணிலிருந்து வந்தவரின் உடல் |

(1 × 4 = 4 புள்ளிகள்)

**(v)ஸ்தேவானுக்குப் பின்னர் யூத கிறிஸ்தவர்களின் தலைவராகச் செயற்பட்ட பிலிப்பு சமுதாயத்தில் ஆற்றிய பணிகள் நான்கினை எழுதுக.**

- நற்செய்தியை அறிவித்தல்.
- பேய்களை ஓட்டுதல்
- நோயாளர்களை குணமாக்குதல்.
- திருமுழுக்கு அளித்தல்.
- சமாரியர்களை மனந்திருப்பி அவர்களுக்கு திருமுழுக்கு அளித்தல்.

(1 × 4 = 4 புள்ளிகள்)

(4 × 5 = 20 புள்ளிகள்)

02)(i) **செங்கடலைக் கடத்தல் பற்றி முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் நான்கினை எழுதுக.**

- ஆசிரியர் தரும் விளக்கத்தின்படி இஸ்ரயேல் மக்கள் செங்கடலின் அருகில் செல்லவில்லை என்பதும் அவர்கள் சென்ற பாதையைப் பற்றிக் கற்கும் போது விளங்கிக் கொள்ளலாம்.
- மத்தியதரைக் கடலுக்கண்மையிலுள்ள கடலேரியான சிறிபோனிஸ் ஏரித் திசையை நோக்கிப் பயணம் செய்திருக்கலாம்.
- மபீஷா ஏரிப் பிரதேசத்தில் சதுப்பு நிலப்பகுதிக்கு அவர்கள் சென்றிருக்கலாம். ஏரிப் பிரதேசத்தில் உண்டாகும் வற்று, பெருக்குப் பற்றிய சம்பவங்கள் நிகழ்ந்திருக்கலாம்.
- கடலைக் கடந்து செல்லல் பற்றிய இந்த விபரங்கள் வெவ்வேறான இரு கதைகளை ஒன்றாக இணைத்து விளக்கியுள்ளனர். முதன் முதலாக கடலைக் கடந்து செல்லும் கதை இவ்வாறானதொன்றாகும்.
    1. மத்திய தரையில் இடம்பெற்ற கடும் புயலினால் கடல் வற்றியமை.
    2. மோசே கோலை நீட்டியவுடன் கடல் இரண்டாகப் பிரிந்தமை.

(ii) **உண்மையில் துன்புறும் ஊழியன் யார் என்பதை நான்கு விடயங்களின் மூலம் விளக்குக.**

- தனி ஆள்
- சில வேளைகளில் சமூகம்
- இறைவாக்கினர்
- மீட்பர்

(1 × 4 = 4 புள்ளிகள்)

(iii)**திருத்தந்தை vii ஆவது பத்திநாதரின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட புதிய துறவற சபைகள் நான்கினைக் குறிப்பிடுக.**

- மாறியனிஸ்ற்
- மாறிஸ்ற்
- டிலாசால் சகோதரர்கள்
- அன்புக் கன்னியர்
- லொறேட்டோ கன்னியர்
- பவுலிஸ்ற்
- சலேசியன்
- இறைவார்த்தை தந்தையர் சபை
- வெள்ளைத் தந்தையர்

(1 × 4 = 4 புள்ளிகள்)

(iv) **போர்த்துக்கேயரின் மறைபோதகப் பணி இலங்கையில் வெற்றியளிப்பதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் நான்கு தருக.**

- மறைத்தூதுவர்களின் ஆழ்ந்த அர்ப்பணமும் முயற்சியும்
- மொழி, கலாசாரம், சுவாத்தியம் எல்லாவற்றையும் பழகிக் கொண்டு தம் வாழ்நாளை அர்ப்பணித்தமை.
- மறைத்தூதுவர்களுக்கு போர்த்துக்கேய ஆட்சியாளர்களிடமிருந்து கிடைத்த உதவி
- பெற்ற மறைச் சுதந்திரம்
- தேசிய மொழிகளைக் கற்று, தேசிய மொழிகளில் சமய நூல்களை எழுதியது.
- சிறு பிள்ளைகளுக்கு மறையைக் கற்பிப்பதற்கு ஆரம்பப் பாடசாலைகளை ஆரம்பித்தமை.
- பல்வேறு இரக்கப் பணிகளில் ஈடுபட்டமை.
- சுற்றுப்பிரகாரம், நாடகம், சுரூபங்களின் உபயோகம் போன்றவற்றின் வழியாக சமய விழிப்பினை ஏற்படுத்தியமை.
- மறைத்தூதுவர்களின் எளிமையான வாழ்க்கை முறை.

(1 × 4 = 4 புள்ளிகள்)

(v) **இறுதி இரா உணவுடன் தொடர்புடையதாகக் காணப்படும் அறிக்கைகள் நான்கின் பெயர்களைக் குறிப்பிடுக.**

- மத்தேயுவின் அறிக்கை
- மாற்குவின் அறிக்கை
- லூக்காவின் அறிக்கை
- பவுலின் அறிக்கை

(1 × 4 = 4 புள்ளிகள்)

(4 × 5 = 20 புள்ளிகள்)

03)(i) **இறைவாக்கினரின் படிப்பினையின்படி சமுதாயத்தில் அநீதியை விளைவிக்கும் பல்வேறு துறைகள் நான்கைக் குறிப்பிடுக.**

- பொருளாதாரம்
- ஆட்சியதிகாரம்
- நீதிமன்றம் (சட்டம்)
- சமாதானம் (ஆன்மீகத் துறை)

(1 × 4 = 4 புள்ளிகள்)

(ii) **கர்த்தர் கற்பித்த செபம், இயேசுவின் வேண்டல் ஆகிய இரண்டுக்குமிடையே காணப்படும் ஒத்த பண்புகள் நான்கினை எழுதுக.**

- தந்தையே என இறைவனை விளித்தல்.
- இறைவனைப் புகழ்தல் இறைவனது திருப்பெயரை போற்றுதல்.
- இறைவனின் திருவுளம் நிறைவேற்றப்படுதல்.
- தீயோனிடமிருந்து பாதுகாத்தருள வேண்டுதல்.

(1 × 4 = 4 புள்ளிகள்)

(iii) **தூய யோவான் எடுத்துக்காட்டுவதன்படி உயிர்ப்பின் பின்னர் கிறிஸ்து காட்சிகொடுத்த சந்தர்ப்பங்கள் நான்கினை எழுதுக.**

- மகதலா மரியாவுக்குத் தோன்றுதல்.
- சீடர்களுக்குத் தோன்றுதல்.
- தோமாவுக்குத் தோன்றுதல்.
- திபேரியாக் கடலருகே சீடர்கள் 7 பேருக்குத் தோன்றுதல்.

(1 × 4 = 4 புள்ளிகள்)

(iv) **கிறிஸ்தவ திருவழிபாடுகளுக்கு கிரேக்க மூலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற செல்வாக்குகள் நான்கினை எழுதுக.**

- திருவழிபாடுகளில் பயன்படுத்தப்படும் பெரும்பாலான சொற்கள்
- வளர்ந்தோருக்கான திருமுழுக்கு வழிபாடுகளில் சேர்க்கப்பட்ட தைலம் பூசுதல்.
- தீய ஆவிகளை விரட்டுதல்.
- முழு இரவுத் திருமுழுக்கு
- திருமுழுக்கை திருவிழிப்புக் கொண்டாட்டமாக்குவது
- மன்றாட்டு மாலை

(1 × 4 = 4 புள்ளிகள்)

(v) **உரோமை கத்தோலிக்க திருவழிபாட்டுச் சடங்குகளின் விசேட பண்புகள் நான்கு தருக.**

- கம்பீரத்தன்மை
- அடக்கமாயித்தல்
- அறிவு சார்ந்தவை
- குறுகியது

(1 × 4 = 4 புள்ளிகள்)

(4 × 5 = 20 புள்ளிகள்)

# பகுதி II

**நோக்கம் :**

**இஸ்ரயேல் விடுதலைப் பயணத்தின் போது பெற்ற இறை அனுபவத்தை அறிந்து இன்றைய கிறிஸ்தவர்கள் தம் வாழ்வின் நிகழ்வுகள் மூலம் இறை அனுபவத்தைப் பெற முற்படல்.**

04.(i) **பாலைநிலப் பயணத்தில் இஸ்ரயேல் மக்கள் இறை பராமரிப்பை அனுபவித்த சந்தர்ப்பங்கள் ஐந்தினை விவரிக்குக.**

- செங்கடலைக் கடந்து எதிரியின் பிடியிலிருந்து காப்பாற்றப்பட்ட போது இறைவன் தமது பக்கமாய் இருந்தார் என உணர்ந்தனர்.
- பாலை நிலத்தில் வழிப்பயணத்தின் போது, பகலில் மேகத்தூண் வடிவிலும் இரவில் நெருப்புத்தூண் வடிவிலும் இறைவன் அவர்கள் முன் சென்றார் என்பதை அனுபவித்தனர்.
- மாரா என்னுமிடத்தில் தாகம் ஏற்பட்ட போது அருந்துவதற்கு முடியாத உவர் நீரை மோசே வழியாக சுவையுள்ள நீராக மாற்றி அவர்களுக்கு அருந்துவதற்குக் கொடுத்தார்.
- சீனாய் பாலைநிலத்தில் உண்ண உணவின்றி இருந்தபோது மன்னா என்னும் உணவினால் அவர்களைப் போஷித்தார்.
- பாலைநிலத்தில் விஷப் பாம்பினால் தீண்டப்பட்டபோது உலோகப் பாம்பின் சின்னத்தின் மூலம் குணமளித்துப் பாதுகாத்தார்.
- வேற்றினத்தாரின் ஆக்கிரமிப்புக்களிலிருந்து பாதுகாத்தார்.

(மேற்குறிப்பிட்ட விடயங்களை விபரித்து எழுதியிருப்பின் ஒன்றுக்கு 2 புள்ளிகள் வீதம் 5 விடயங்களுக்கு 10 புள்ளிகள் வழங்குக.)

(ii) **கிறிஸ்தவர்களாகிய நீர் அன்றாட வாழ்வில் இறை பராமரிப்பை அனுபவிக்கும் சந்தர்ப்பங்கள் ஐந்தினைச் சுருக்கமாக விளக்குக.**

- பல்வேறு துன்பதுயரமான நிகழ்வுகளான நிலநடுக்கம், சுனாமி, சூறாவளி போன்ற அனர்த்தங்கள் மத்தியிலும் இறைவன் எம்மைக் காப்பாற்றுகின்றார்.
- இரவு பகல் வேளைகளில் எம் கடமைகளைச் செயற்படுத்தும் போது இறைபிரசன்னம் எம்மை வழிநடத்திச் செல்வதை உணர்கின்றேன்.
- தீய நாட்டங்களில் ஈடுபடும் மனிதர்கள் தம் குடிவெறி, களியாட்டம், பரத்தமை, கொலை, களவு போன்ற கசப்பான அனுபவங்களிலிருந்தும் வாழ்விலிருந்தும் விடுதலை பெற்று இயேசுவின் மீட்பின் சந்தோசத்தை அனுபவிப்பதைக் காண முடிகின்றது.
- இன்று அகதிகளாக, அநாதைகளாக கைவிடப்பட்டோராக இருப்பவர்களுக்கு செல்வந்த நாடுகள், குடும்பங்கள், நிறுவனங்களினூடாக அவர்களது அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை காண முடிகிறது.
- இன்று நோயின் பிடியிலும் மரணத் தருவாயிலும் உள்ளவர்கள் இறைவனை நோக்கி விசுவாசத்துடன் மன்றாடிக் கேட்கும் போது அவர்கள் விடுதலை பெற்றுக் கொள்வதை காணமுடிகிறது.

- எதிரிகளின் தொல்லைகள், பிரச்சினைகளில் மத்தியில் இறைவன் எம்மோடிருந்து எம்மைக் காத்து வழிநடத்திப் பாதுகாப்பதை கண்டுணர முடிகிறது.

(இவ்வாறான ஐந்து கருத்துக்கள் விளக்கியிருப்பின் 2 × 5 = 10 புள்ளிகள்)

**நோக்கம் :**

**நற்செய்தியாளரான புனித மாற்கு பற்றி அறிதலும் அவரது நற்செய்தியின் மூலம் தரப்படும் விண்ணரசு பற்றிய செய்தியை ஏற்று அதன்படி வாழ்வதும்.**

05.(i) **தூய மாற்கு நற்செய்தியின் ஆசிரியத்துவம், நோக்கம், பிரதான பண்புகள் ஆகியன பற்றிச் சுருக்கமாக விவரிக்குக.**

ஆசிரியத்துவம்

- இதுவே முதலில் எழுதப்பட்ட நற்செய்தி
- இவர் கிறிஸ்துவின் சீடருமல்ல. அவரைக் கண்டவரும் சொன்னவற்றைக் கேட்டவருமல்ல, ஆனால் பேதுருவின் சீடனாயிருக்கலாம் என்பது விவிலிய வல்லுநர்கள் ஏற்றுக்கொண்ட கருத்தாகும்.
- பேதுருவின் சீடரென கூறமுடியாது ஏனெனில் பவுலின் திருமுகங்களில் மாற்கு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- திருத்தூதர் பணியிலும் மாற்கு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- யூதரல்லாத கிறிஸ்தவர்களுக்கு நற்செய்தியை எழுதிய பொழுதிலும் அவர் அதனை யூதப் பின்னணியில் வைத்தே எழுதினார்.
- கி.பி 60 - 70 க்கிடையில் எழுதப்பட்டதாக நம்பப்படுகின்றது.

**நோக்கம்**

- நீரோவின் துன்புறுத்தல்களின் போது உரோமையில் வாழ்ந்த கிறிஸ்தவர்களின் ஆன்மீக ஆறுதலுக்காக எழுதப்பட்டது. பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளான கிறிஸ்தவர்களுக்கு ஆறுதல் தரும் முகமாக இந்நற்செய்தி அமைந்தது.
  1. யூத பண்பாடுகள் விலக்கப்பட்டுள்ளன.
  2. உரோமைக் கலாச்சாரம் திணிக்கப்படல்.
  3. உரோமை வரிச் சட்டம்
  4. துன்ப துயரங்கள் அனுபவித்தல் பற்றிய அவதானம்

**பிரதான பண்புகள்**

- இயேசுவின் போதனையை விட அவரது செயல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.
- முழு நற்செய்தியிலும் அறிவுரையுடனான செயற்பாட்டுத் தன்மை காணப்படுகின்றது.
- இயேசுவின் தூதுப்பணி கலிலேயாவிலிருந்து எருசேலம் வரை தமது நோக்கத்தை முன் வைத்துள்ளார்.
- இயேசுவின் இறைத்தன்மைக்கு முக்கிய இடம் கொடுக்கப்படுகின்றது. மெசியா பற்றிய இரகசியம் வெளிப்படுத்தப்படுகின்றது.
- இயேசுவின் மனிதத்துவம் காட்டப்பட்டுள்ளது.
- இயேசுவின் பணிவாழ்வு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இறையாட்சி பற்றி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- உலக முடிவு பற்றிக் கூறப்பட்டுள்ளது.
- கிறிஸ்துவின் பாடுகள் மரணம் உயிர்ப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் பாடுகளின் நற்செய்தி என அழைக்கப்படுகின்றது.

( ஒரு விடயத்திற்கு 1 புள்ளி வீதம் எல்லாமாகப் 10 விடயங்கள் எழுதியிருப்பின் 10 புள்ளிகள் வழங்கவும்)

(ii) **இறை அரசின் பெறுமதிகளை எடுத்துக்காட்டும் உவமைகள் ஐந்தினைக் குறிப்பிட்டு, அவற்றின் மூலம் கிடைக்கும் செய்திகள் ஐந்தினை உமது வாழ்க்கையுடன் தொடர்புபடுத்திச் சுருக்கமாக விவரிக்குக.**

1. புதையல்
2. முத்து
3. வலை
4. திருமண விருந்து
5. காணாமற் போன மகன்
6. கடுகுவிதை

**புதையல்**

- இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போது அவற்றை புறக்ககணிக்கக் கூடாது.
- புதையல் கிடைத்த போது வாழ்வைப் புதுத்தன்மையுடையதாக்கும் போது இறையாட்சியை உரிமையாக்க முடியும்.

**முத்து**

- இறையாட்சி மனதைக் கவரக் கூடியதாக இல்லாவிட்டாலும் நிலை வாழ்வின் மகிழ்ச்சியை உரிமையாக்குகிறது என்பதை உணர வேண்டும்.

**வலை**

- உலக முடிவில் இவ்வுலகில் வாழ்ந்த வாழ்க்கைக்கு ஏற்ப ஒவ்வொருவரும் சம்பாவனை அல்லது தண்டனையை அனுபவிக்க வேண்டும்.

**திருமண விருந்து**

- இறையாட்சியில் நுழைவதற்குத் தகுதிபெற, தேர்ந்தெடுக்கப்பட்ட இனமான நாம் எம்மைத் தகுதியுடையவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.
- தகுதியற்ற நிலையில் இருப்போர், தீர்ப்புக்குள்ளாவார்கள்.

**காணாமற் போன மகன்**

- எமது வாழ்வில் மனமாற்றத்தின் அவசியம் உணர்த்தப்படுகின்றது.

**கடுகுவிதை**

- திருச்சபையினரான நாம் உலகுக்குப் பயனுள்ளவர்களாக வாழ வேண்டும். இன, மத, மொழி வேறுபாடின்றி திருச்சபையால் அனைவரும் பயனடைகின்றனர்.

(உவமைகள் ஐந்துக்கு 5 புள்ளிகளும்
இன்றைய சமூகத்துக்குப் பொருந்தும் விதத்தில் கருத்துக்கள் 5 எழுதியிருப்பின் 5 புள்ளிகளுமாக மொத்தம் 5 + 5 = 10 புள்ளிகள் வழங்குக.)

**நோக்கம் :**

**கிறிஸ்தவ படிப்பினைகளின் மூலம் நிறைவு பெற்று இறையரசின் பங்காளர் ஆவதற்கு முயற்சிப்பார்.**

06.(i) **கிறிஸ்துவின் காலத்திற்கு முன்னர் பலஸ்தீனாவை ஆட்சிசெய்த பேரரசர்கள் மூவரின் பெயர்களைக் குறிப்பிட்டு, இக்காலப்பகுதியில் இடம்பெற்ற விசேட நிகழ்வுகள் இரண்டினை விபரிக்குக.**

பாரசீக அரசு - சைரசு மன்னன் (கிமு 538)
தாரியுஸ் மன்னன் (கிமு 444)

கிரேக்க அரசு - மகா அலெக்சாண்டர்
- அந்தியோக்கஸ் எபிபானஸ்

உரோமைப் பேரரசு - பொம்பேயி (சேனாதிபதி)
ஏரோது மன்னன்

**பாரசீக நிகழ்வுகள்**

- அரசன் சைரஸ் பபிலோனியாவைக் கைப்பற்றி, இஸ்ரயேலுக்கு விடுதலையளித்து சொந்த நாடு செல்ல அனுமதி அளித்தான்.
- செருபாலேலின் தலைமையின் கீழ் எருசலேம் ஆலயம் மீண்டும் கட்டப்பட்டது.
- சட்டவல்லுனரும் குருவுமான எஸ்ராவின் தலைமைத்துவத்தில் சட்டங்கள் எழுதப்பட்டு நாட்டுக்கு வழங்கப்பட்டது.

**கிரேக்கப் பேரரசின் நிகழ்வுகள்**

- அரசியல், பொருளாதாரம் கலாசாரத்தின் சாயல் அடிமைப்படுத்தப்பட்ட மக்களில் தாக்கத்தை ஏற்படுத்தியது.
- அலெக்சாண்டரின் ஆட்சியின் பின்னர் வந்த அந்தியோக்கு எபிபானஸ் மன்னன் காலம் யூத மக்களுக்கு துர்பாக்கிய காலமாக அமைந்தது.
- யூத மறையை இழிவுபடுத்த பயங்கர வழிபாடுகளைப் பின்பற்றுமாறு எபிபானஸ் வலியுறுத்தினான்.
- கிரேக்க மொழியில் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டது.

**உரோமைப் பேரரசின் நிகழ்வுகள்**

- கி.மு 63 இல் பொம்பேயி என்ற உரோமைச் சேனாதிபதி எருசலேமை முற்றுகையிட்டு பலஸ்தீனாவைக் கைப்பற்றி முழு நாட்டையும் உரோமைப் பேரரசின் கீழ் கொணர்ந்தான்.
- யூதர்களுக்கான அதிகாரியாக ஏரோது நியமிக்கப்பட்டார்.
- யூலியஸ் சீசரின் கீழ் 40 வருடங்கள் ஆட்சி செய்த ஏரோது கி.மு 4 இல் இறந்தார்.
- பெரிய ஏரோதின் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்து பிறந்தார்.
- பின் ஆளுனனாக பிலாந்து நியமிக்கப்பட்டார்.

அரசர்கள் மூவரின் பெயர் எழுதியிருப்பின் 3 × 2 = 6 புள்ளிகள்
நிகழ்வுகள் இரண்டுக்கு 2 × 2 = 4 புள்ளிகள்
(மொத்தம் 6 + 4 = 10 புள்ளிகள்)

(II) **தூய பவுலின் முக்கிய படிப்பினைகள் ஐந்தினைக் குறிப்பிட்டு, இன்றைய சமூகத்திற்கு அவை எவ்வாறு பொருத்தமானதாக அமைகின்றன என்பதனைச் சுருக்கமாக விளக்குக.**

- **இறையருள் :** இது இரக்கம் அல்லது நிலையான அன்பு எனப் பொருள்படும்.
- **கிறிஸ்துவின் தலைமைத்துவமும் தாழ்ச்சியும் :** இயேசுக் கிறிஸ்துவின் இணையற்ற தன்மையையும் அதே வேளை இறைமகனின் பணிவான தன்மையையும் பற்றிப் பேசப்படுகின்றது.
- **உயிர்ப்பும் மறுவருகையும் :** பவுலின் இறையியல் சிந்தனை படிப்பினைகள் அனைத்தும் கிறிஸ்துவின் உயிர்பையே அத்திவாரமாகக் கொண்டுள்ளன.
- **இறந்தவர்களின் உயிர்ப்பு :** கிறிஸ்து சாத்தானின் பாவத்தின் மேல் சாவின் மேல் கொண்ட வெற்றி இறந்தவர்களின் உயிர்ப்பில் முழுமை அடைகின்றது.
- **உடலின் உயிர்ப்பு :** கிறிஸ்துவின் உயிர்ப்பையும் தொடர்ந்து கிறிஸ்துவின் நம்பிக்கைக் கொண்டு இறந்தவர்களின் உயிர்ப்பையும் புனித பவுல் வலியுறுத்துகின்றார்.
- **கிறிஸ்துவின் ( இரண்டாம் ) மறு வருகை :** புனித பவுல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைப் பற்றி கற்பிக்கிறார். அதாவது உலக முடிவில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எவ்வாறு நிகழும் என்பதை எடுத்துக் கூறுகிறார்.
- **குடும்ப வாழ்வு :** நல்ல குடும்ப வாழ்வைத் திருச்சபைக்கு ஒப்பிடுகின்றார், ஒரு நல்ல குடும்பத்தில் கணவன், மனைவி பெற்றோர், பிள்ளைகள் மத்தியில் நிலவவேண்டிய அன்பு, கடமை, பொறுப்புக்கள் பற்றி எடுத்துக் கூறுகின்றார்.
- **தூய ஆவியின் கனிகளும் கொடைகளும் :** புனித பவுல் ஆவியின் கனிகள், கொடைகள் பற்றிக் கூறுவதன் மூலம் தூய ஆவி ஆகிய தெய்வீக சக்தியின் மீது விசுவாசத்தை வளர்க்க, அவரின் உதவியை நாட அறிவு புகட்டுகிறார்.
- **மேற்கூறிய புனித பவுலின் படிப்பினைகள் இன்றைய சமூகத்திற்கும் பொருத்தமானதாகும். எவ்வாறெனில்,**
- களவு, பொய், நேர்மையீனம் நிறைந்த இன்றைய சமூகத்திற்கு இறைவனின் இரக்கம் மிக அவசிய மானதாகும். மனிதன் தன் மனச்சான்றின் படி வாழ இறைவனின் அருளை அவன் நாட வேண்டும்.
- இன்றைய உலகில் தலைமைத்துவம், அதிகாரம் செலுத்துவதற்கு என்ற மனநிலை நிலவுகின்றது. ஆனால் கிறிஸ்துநாதர் தலைவன் பணியாளனாக இருக்கின்றான் என்ற நோக்குடன் அவரிடத்தில் காணப்பட்டதாழ்ச்சிமுறையானதலைமைத்துவம்என்பனஇன்றையசமூகத்திற்குஓர்எடுத்துக்காட்டாகும்.
- உடலின் உயிர்ப்பு, உயிர்ப்பும் மறுவருகையும், இறந்தவர்களின் உயிர்ப்பு, கிறிஸ்துவின் மறுவருகை, என்பவற்றைப் பற்றிய சிந்தனையற்ற மனித வாழ்வில் இன்று இலௌகீகம், உலக ஆசைகள் நிறைந்து காணப்படுகின்றன. மனிதன் தன் வாழ்வின் முடிவு என்ன என்பது பற்றிச் சிந்தித்து வாழப் புனித பவுலின் படிப்பினைகள் உதவுகின்றன.
- குடும்பவாழ்வு உலகில் மூவொரு கடவுளின் அன்பை வெளிப்படுத்தும் அடையாளம் மட்டுமன்றி கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையில் உள்ள அன்புறவின் அடையாளமாகும். எனவே புனிதமான குடும்ப வாழ்வை மாசுபடுத்தாது அதைத் தூய்மையாகப் பேணி வாழப் புனித பவுல் வழிகாட்டுகிறார்.
- ஒரு கிறிஸ்தனின் வாழ்வில் தூய ஆவியின் செயற்பாடும், அவரது துணையும் மிகவும் அவசியமானது எனப் புனித பவுல் கூறுகிறார். இதனை ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஏற்றுக்கொண்டு தூய ஆவியின் கொடைகளைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

(புனித பவுலின் படிப்பினைகள் 5 எழுதியிருப்பின் 5 புள்ளிகள் சமூகத்திற்குப் பொருந்தும் முறைகள் 5 எழுதியிருப்பின் 5 புள்ளிகள்)

(இவற்றுள் ஏதாவது விடயங்கள் 5 எழுதி விளக்கியிருப்பின் 2 × 5 = 10 புள்ளிகள்)

**நோக்கம்:**

**வரலாற்று நிகழ்வுகள் பற்றிய அறிவின் மூலம் இன்றைய கிறிஸ்தவனின் பொறுப்புகளையும் கடமைகளையும் புரிந்து செயற்படுதல்.**

07. (i) **பதினாறாம் நூற்றாண்டில் திருச்சபையின் மறுசீரமைப்புப் பணியை முன்னெடுத்துச் செல்லத் தலைமை தாங்கிய குருத்துவ, துறவற சபைகள் ஐந்தினைப் பெயரிட்டு, அவை பற்றிச் சுருக்கமாக விவரிக்குக.**

- 16 ஆம் நூற்றாண்டுகளில் சீ.ர்திருத்தச் சபைகளின் புரட்சியின் பலனாகத் கத்தோலிக்க திருச்சபையில் சீர்திருத்தத்தை வலியுறுத்தி பல புதிய துறவற சபைகள் நிறுவப்பட்டன. அதே சமயம் ஏற்கனவே இருந்த துறவற சபைகளும் மறுசீரமைக்கப்பட்டன. திருச்சபையின் மறுசீரமைப்புச் செயலை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்குத் தூய்மையான செயலூக்கமுள்ள குருக்களின் தலைமைத்துவம் தேவைப்பட்டது. திருச்சபையின் சீர்த்திருத்தத்தை நோக்காகக் கொண்டு நிறுவப்பட்ட துறவற சபைகளில் **கார்மேல் சபை, கப்புச்சின் சபை, வின்செசன்சியன் சபை, இயேசு சபை, அன்பு கன்னியர் சபை** என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**கார்மேல் சபை**

- 12 ஆம் நூற்றாண்டில் பலஸ்தீனத்திலுள்ள கார்மேல் மலையில் ஆரம்பமானது.
- இச்சபையின் துறவிகள் கார்மேல் மலையில் தனிவாசமும் கடுமையான தப வாழ்வும் வாழ்ந்தவர்கள்.
- புனித சைமன் ஸ்டொக் இத் துறவற வாழ்வின் மரபுகளை இங்கிலாந்திற்கு எடுத்துச் சென்றார்.
- பல்கலைக் கழககங்களுக்கு அண்மையிலுள்ள நகரங்களில் கார்மேல் சபையின் மடங்கள் நிறுவப்பட்டதன் காரணம் அவர்கள் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாற்றினர், மறைப்பணிகளில் ஈடுபட்டனர்.
- கார்மேல் சபைத் துறவியான புனித அவிலா திரேசா தனது துறவற சபையில் மறுமலர்ச்சியை உருவாக்க முயற்சி செய்தார்.
- கார்மேல் சபையின் ஆரம்பகால தப வாழ்வு, ஆழ் தியான நிலை வாழ்வையும் கொண்டு வருவதற்கு புனித அவிலா திரேசா எடுத்த முயற்சிகள் பலனளித்தன. இவருக்கு உறுதுணையாகப் புனித சிலுவை அருளப்பர் இருந்தார்.
- நிறை வாழ்வின் வழி, உள்ளக மாளிகை எனும் ஆன்மீக நூல்கள் புனித அவிலா திரேசாவினால் எழுதப்பட்ட சிறந்த ஆன்மீக நூலாகும்.
- புனிதா அவிலா திரேசாவின் உதவியுடனும் வழிகாட்டலுடனும் புனித சிலுவை அருளப்பர் சீர்த்திருத்தத்திற்குத் துணையாய் இருந்தார். இவர் ஆன்மீக வாழ்வு பற்றிய பல நூல்களை எழுதியுள்ளார்.
- கார்மேல் சபை ஏற்றம்
- இருண்ட இரவு
- ஆன்மீகப் பாடல்
- அன்பின் அணையாச் சுவாலை
- இவர்கள் இருவர் எழுதிய ஆன்மீக வாழ்வின் நூல்கள் பலரது வாழ்விற்கு மிகவும் உதவியாக இருந்தன.
- ஆன்மீக வாழ்வு ஆழ் தியான நிலைச் செபமும் இவர்களது ஆன்மீக ஆக்கங்கள் மிகவும் முக்கியமானவையாகும். ஆன்மீக வாழ்வில் இறையொன்றிப்பைப் அனுபவிப்பதற்கு தாழ்ச்சி இன்றியமையாததாகும் என்னும் அறிவுரையின் படி குழந்தை இயேசுவின் புனித திரேசா வாழ்வினால் சான்று பகர்ந்துள்ளார்.

**கப்புச்சின் சபை**

- 16 ஆம் நூற்றாண்டில் இத்தாலியில் தோன்றிய துறவற சபைகளில் கப்புச்சின் சபை முக்கியமானது. 13 ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்த பிரான்ஸிகன் துறவற சபைகளிலிருந்து 1525 இல் இச்சபை தோன்றியது.
- அசீசியின் புனித பிரான்ஸிசின் சட்ட ஒழுங்குகளை மிக நுணுக்கமாக கடைப்பிடிக்க வேண்டுமென்றும் தொடக்க நற்செய்தி அறிவுரை வாழ்க்கை முறையை மீண்டும் வலியுறுத்தும் நோக்குடனும் கப்புச்சின் சபை ஆரம்பிக்கப்பட்டது.
- இவர்களுக்கு தலைமை தாங்கிய பிரான்சிஸ்கன் சபையின் மத்தேயு டீ பஸ்ஸி என்பவரின் துணையுடன் தோன்றியதாகும்.
- ஆரம்பத்தில் சபைக்கு, திருச்சபைக்கு உள்ளேயிருந்தே தடைகள் வந்தாலும் இப்புதிய சபை தமது வளர்ச்சியை மெதுவாக முன்னெடுத்தது. அவர்கள் தங்கள் போதிக்கும் பணியையும் மடவாச வாழ்க்கையையும் இணைத்து வாழ்ந்தனர். நோயாளரை பராமரிப்பதனாலும் கடின உழைப்பினாலும் கிடைத்த வருமானத்தைக் கொண்டு வாழ்ந்தனர். புரட்டஸ்தாந்து சீர்த்திருத்தவாதிகளுக்கு எதிராகப் போதித்தனர். எளிமையான வாழ்வு வாழ்ந்தனர்.

**வின்சென்சியன் சபை**

- புனித வின்சென்ட் டி போல் சபையின் சீர்த்திருத்தத்திற்கு முன்னின்று செயலாற்றியவர்.
- இவர் ஏழைகள் மட்டில் ஆழ்ந்த அன்பும் இரக்கமும் கொண்டவர்.
- கி.பி 1625 இல் வின்சென்ட் டி போல் மறைமாவட்டக்குருக்களின் குழுவை பிரான்சில் ஆரம்பித்தார். மறைமாவட்டக் குருக்களின் புனிதத் தன்மையை வளர்ப்பதே இதன் நோக்கமாகும்.
- கத்தோலிக்கத் திருமறையைப் போதிக்கவும், சீர்த்திருத்தவாதிகளின் படிப்பினைகளுக்கு பதிலளிப்பதும் இவர்களின் பணியாகும். திருச்சபையில் மறுமலர்ச்சி ஏற்படுத்த வின்சென்சியன் சபை இரண்டு முறைகளைப் பின்பற்றியது.
    1. துறவற சகைபளை நிறுவி முன்மாதிரிகையான குருக்களை உருவாக்குதல்.
    2. திரிதெந்தின் பொதுச் சங்கப் பரிந்துரைகளுக்கு ஏற்றவாறு குருக்களை உருவாக்கும் பொறுப்பை துறவற சபையிடம் ஒப்படைத்தல்.
- புனித வின்சென்ட் டி போல் 1633 இல் அன்புக்கன்னியர் சபையையும் ஆரம்பித்தார்.
- இது பெண்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட முதல் சபையாகும்.

**இயேசு சபை**

- திருச்சபையின் மறுசீரமைப்புப் பின்னணியில் உருவாகியது.
- புனித லொயோலா இக்னேசியஸ்சினால் கி.பி 1533 இல் ஆரம்பிக்கப்பட்டது.
- அவர் போரில் காயமுற்று படுக்கையில் இருந்த போது வாசித்த கிறிஸ்துவின் வாழ்க்கை, புனிதர்களின் வாழ்க்கை என்னும் நூல்கள் அவரின் ஆன்மீக மறுமலர்ச்சிக்கு ஊற்றுகளாக அமைந்தன.
- பாமர மக்களுக்கும் ஏழைகளுக்கும் என ஆரம்பிக்கப்பட்ட கல்விப் பணி பின்னர் இளவரசர்களுக்கும் அரசர்களுக்கும் வழங்கப்பட்டது.
- துறவற வார்த்தைப்பாடுகளை ஏற்றுத் தம்மை அர்ப்பணித்து திருத்தந்தையின் கட்டளைக்கு கீழ்ப்படிந்ததாக வாக்குறுதி எடுப்பது இச்சபையின் சிறப்பு அம்சமாகும்.
- கத்தோலிக்க திருச்சபையின் மறையுண்மையைக் கற்பித்து பாதுகாப்பது இவர்களது பணியாக இருந்தது.
- சீர்திருத்தச் சபைகள் வளர்ச்சியடைந்த காலத்தில் கத்தோலிக்கச் திருச்சபையின் மறுமலர்ச்சி இயேசு சபை குருக்களால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

- ஆன்மீகத்திலும் இறையியலிலும் பூரணத்துவம் பெற்றவர்களுள் புனித லோயாலோ இக்னேசியசினால் எழுதப்பட்ட ஆன்மீக பயிற்சிகள் எனும் நூலும் புனித பீட்டர் கனீசியஸினால் எழுதப்பட்ட மறைக்கல்வி நூல்கள் மூன்றும் கத்தோலிக்க மறைக்கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உதவியதோடு சீர்த்திருந்த சபையி–னால் புகழப்பட்டதோடு திரிதெந்தின் பொதுச்சங்கத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இயேசு சபையின் குருவான புனித றொபார்ட் பெலார்மின் போன்றோர் திரித்தெந்தின் பொதுச்சங்கத்தில் இறையியலாளராகச் செயற்பட்டனர்.

( ஐந்து துறவற சபைகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் ஒன்றுக்கு ஒரு புள்ளி வீதம் ஐந்து புள்ளிகளும் சுருக்கமாக விளக்கியிருப்பின் ஒன்றுக்கு ஒரு புள்ளி வீதம் ஐந்து புள்ளிகளும் வழங்கவும்)

(ii) **சீர்த்திருத்தச் சபைகளின் போதனைகளுக்குப் பதிலளிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட திரிதெந்தீன் பொதுச்சங்கத்தின் மூலம் (1545 - 1563) முன்வைக்கப்பட்ட மறுமலர்ச்சி செயற்றிட்டங்கள் ஐந்தினைக் குறிப்பிட்டு, அவை உமது ஆன்மீக வளர்ச்சிக்கு உதவும் விதத்தைச் சுருக்கமாக விவரிக்குக.**

**திரிதெந்தின் பொதுச்சங்கம் முன்வைத்த மறுமலர்ச்சித் திட்டங்கள்**

- பரிபூரண பலன் பற்றிய போதனை முறையை நீக்குதல்.
- மரியன்னை, புனிதர்களுக்கு தகுந்த முறையில் வணக்கம் செலுத்த ஊக்குவித்தல்.
- குருத்துவப் பயிற்சிக்காக ஒவ்வொரு மறைமாவட்டங்களிலும் குரு மடங்களை நிறுவுதல்.
- நற்கருணைப் பெறுவதற்கு ஊக்குவித்தல்.
- அடிக்கடி ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவதற்கு ஊக்குவித்தல்.
- நற்கருணை ஆராதனையையும் நற்கருணை ஆசியுரையும் பெறுவதற்கு ஊக்குவித்தல்.
- இறைவனின் தயாகிய அன்னை மரியாவின் முன்மாதிரியைப் பின்பற்றி எவ்வேளையிலும் இறைவனை போற்றி புகழ்ந்து ஆராதித்து வாழப் பயிற்றுவித்தல். தினமும் செபமாலை தியானங்கள் வழியாக மரியன்னைக்கு வணக்கம் செலுத்துதல்.
- புனிதர்களின் வாழ்க்கை முன்மாதிரிகளை அறிந்து வாழப் பழகிக் கொள்வதோடு புனிதமான வாழ்க்கை வாழ்வதுடன் புனிதத் தன்மைக்கு வணக்கம் செலுத்துதல்.
- இன்றைய இளைஞர்களை குருத்துவ வாழ்விற்கு ஊக்குவிப்பதோடு அவர்கள் வளர்ச்சிக்கு உதவுதல்.
- தினமும் திருப்பலியில் பங்குபற்றி நற்கருணை உட்கொண்டு ஆன்மாவை திடப்படுத்துதல், தூய வாழ்க்கை வாழ்தல்.
- ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்று இறைவனுக்கு ஏற்புடையவராக வாழ்தல்.
- நற்கருணை ஆசீர், பவனி என்பவற்றில் உண்மையான பக்தி நம்பிக்கையுடன் பங்குபற்றுவதோடு பி–றரையும் ஊக்குவித்தல்.

( இது போன்ற கருத்துக்கள் மறுமலர்ச்சித் திட்டங்கள் எழுதியிருப்பின் ஒன்றிற்கு ஒரு புள்ளி வீதமும் விளக்கியிருப்பின் ஒன்றிற்கு ஒரு புள்ளி வீதமும் 10 புள்ளிகள் வழங்கப்படும்.)

**நோக்கம்:**

**கிறிஸ்தவ மறைக்காகவும் இலங்கை மக்களின் நலனுக்காகவும் தம்மை அர்ப்பணித்த எமது நாட்டுப் புனிதரின் வாழ்க்கை முன்மாதிரியைப் பின்பற்றுவர்.**

08. (i) **தூய யோசப் வாஸ் அடிகளாரின் மறைதூதுக் கொள்கைகள் ஐந்தினை சுருக்கமாக விளக்குக.**

- இந்நாட்டுக்கு வருகை தந்ததும் பணியாற்றியதும் தனியே கிறிஸ்துவின் பிரதிதியியாக மட்டுமே ஆகும்.
- எந்தவொரு அரசியல் தொடர்போ அரச உதவியோ இல்லாமலும் மத பிரசாரத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும் என்பதைத் தனது பணி மூலம் கத்தோலிக்க உலகுக்குக் காட்டியுள்ளமை.
- வேற்றுமைகள் பாராது தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டமை.
- தேசிய மொழிகளை நன்கு கற்றுக்கொள்ளாது மறைதூதுப் பணியில் ஈடுபடல் மிகக் கடினமானது என ஏற்றுக்கொண்ட வாஸ் அடிகளார் சிங்களம் தமிழ் மொழிகளைப் பொது நன்மை கருதி நன்கு கற்றுக்கொண்டமை.
- இலங்கையில் கத்தோலிக்க மறைக்குத் தேசிய கலாசாரப் பண்புகளைத் தொடர்பு படுத்துவதற்கும் வாஸ் அடிகளார் முயற்சி செய்தார். அக்கால வழக்கத்திற்கேற்ப பொது வழிபாடுகள் இலத்தீன் மொழியில் நடைபெற்ற போதும் தேசிய மொழிகளில் செபிப்பதற்கு வழியமைத்துக் கொடுத்தமை.
- போர்த்துக்கேயர்காலத்தில்கத்தோலிக்கராக இருந்தவர்களுக்குத்தொடர்ந்தும்நல்லகத்தோலிக்கர்களாக வாழ உதவியமை.
- ஒல்லாந்தரின் வருகையால் புரட்ஸ்தாந்து மத்தைத் தழுவிய கத்தோலிக்கர்களுக்கு உண்மையான திருச்சபை எதுவெனத் தெளிவுபடுத்தியதுடன் அவர்களை மீண்டும் கத்தோலிக்க திருச்சபையில் சேர்த்துக்கொண்டமை.
- தமது நடமாடும் மறைதூதுப் பணியினால் மிகப்பெரும் பிரதேசங்களுக்கும் மக்களுக்கும் பணியாற்றியமை.
- குருக்கள் பற்றாக்குறையாக இருந்தமையால் சிறு குழுமங்களுக்குப் பொதுநிலையினரைத் தலைவர்களாக நியமித்தமை. உதாரணம் : அண்ணாவியார், சக்கிருஷ்டியான், மூப்பர்.
- செபித்தலைத் தமது வாழ்வின் ஆபரணமாகக் கொண்டு எல்லாவற்றையும் கடவுளிடம் ஒப்படைத்தமை.

( இவ்வாறான கருத்துக்கள் ஐந்து எழுதியிருப்பின் ஒன்றிற்கு இரண்டு புள்ளி வீதம் பத்து புள்ளிகள் வழங்குக.)

(ii) **அண்மைக்காலத்தில் இலங்கையில் பல்வேறு இனங்களினதும் மதங்களினதும் சமுதாயக் குழுக்களினதும் உரிமைகளுக்காக கிறிஸ்தவ குரல் எழுப்புதல் தொடர்பாக ஐந்து காரணி-களை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாக விளக்குக.**

- இலங்கை வாழ் மக்களின் இன மத கலாசாரங்களோடு ஒன்றித்து அவற்றிற்கு மதிப்பளித்து அவற்றினூடாக கிறிஸ்தவ விழுமியங்களை வளர்க்க உதவுதல்.
- இனங்கள் மதங்களின் அடையாளங்கள் விழாக்கள் வைபவங்களின் இடையூறுகளை ஏற்படுத்தாது ஐக்கியமாக வாழ வழிவகுத்தல்.
- ஏதாவது விபரீதங்கள் வன்முறைகள் எழும் பட்சத்தில் பழிவாங்காது மன்னித்தல்.
- அனைத்து மக்களுடனும் சமாதானமாகவும் புரிந்துணர்வுடனும் வாழ உதவுதல்.
- அநீதிகள் நடைபெறும் பட்சத்தில் நீதி நேர்மையுடன் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு அனைவரும் முன்னின்று உழைத்தல்.
- தவறான முடிவுகள், தீர்ப்புகளின் போது அவற்றுக்காக குரல் கொடுத்து அவற்றுக்கு சரியான தீர்ப்பு வழங்க ஒத்துழைப்பு நல்குதல்.

(இது போன்ற கருத்துக்கள் எழுதியிருப்பின் ஒன்றிற்கு ஒரு புள்ளி வீதமும் விளக்கியிருப்பின் ஒன்றிற்கு ஒரு புள்ளி வீதமும் வழங்கப்படும்.)